மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.11/2023
அ.வ.எண்.117/2017

1. அம்மாசி
2. தங்கவேலு
3. ஆனந்தன் ... மனுதாரர்கள்/1, 3, 5 பிரதிவாதிகள்

/எதிராக/

1. சீதாராமன்
2. சண்முகம் (இறந்துவிட்டார்)
3. சுப்ரமணி
4. பூங்கோதை
5. மாதேஸ்வரி
6. செந்தில்குமார் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 19.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியபிரியா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையை ஏற்றுக் கொள்ள கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்கள்/1, 3, 5 பிரதிவாதிகள் மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே பதிலுரை தாக்கல் செய்து வழக்கு நடைபெற்றுக் கொண்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் முன்தீர்ப்பு தடையால்

பாதிக்கப்படுகிறது என்ற விவரத்தை பதிலுரையில் கூறாமல் விடுபட்டுவிட்டது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. அதனால் மேற்படி விபரத்தை கூறி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையை ஏற்றுக் கொள்ள கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை ஏற்கனவே முடிந்து, வா.சா.2ன் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. அ.வ.எண்.161/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து அதுவும் விசாரணையில் உள்ளது. இந்நிலையில் சுமார் 6 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் இம்மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. 6 வருடங்களாக கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யாததற்கான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் A.S.No.37/1988ல் உள்ள தீர்ப்பு ஒரு ஆவணமாக மட்டுமே எடுத்துக்கொள்ள முடியும். அது வேறொரு குடும்பத்துடன் இம்மனுதாரர்கள் நடத்திய வழக்காகும். அதன் தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தாது. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :-</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே பதிலுரை தாக்கல் செய்து வழக்கு நடைபெற்றுக் கொண்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்படுகிறது என்ற விவரத்தை பதிலுரையில் கூறாமல் விடுபட்டுவிட்டது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அதனால் மேற்படி விபரத்தை கூறி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே அசல் வழக்கில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் பதிலுரையை ஏற்றுக் கொள்ள கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை ஏற்கனவே முடிந்து, வா.சா.2ன் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், அ.வ.எண்.161/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து அதுவும் விசாரணையில் உள்ளது என்றும், இந்நிலையில் சுமார் 6 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் இம்மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 6 வருடங்களாக கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யாததற்கான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வாதம் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/1, 3, 5 பிரதிவாதிகள் மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் விளைவுறு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிப்படைகிறது என்றும், மேற்படி விவரங்களை மனுதாரர்கள் தங்களது பதிலுரையில் கவனக்குறைவாக சொல்லாமல் விட்டுவிட்டதாகவும், எனவே மேற்படி சங்கதிகளை குறிப்பிட்டு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கு 2017ம் வருடம் தாக்கல்

செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தொடங்கி, வா.சா.1 விசாரிக்கப்பட்டு, தற்போது வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில், 6 வருடங்கள் கழித்து இம்மனு தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தால் பாதிப்படைகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) மேற்கண்ட எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்தை கருத்தில் கொள்கையில், வழக்கு நடவடிக்கைகளில் புதிதாக ஒரு எதிர்வாதத்தை முன் வைத்து, கூடுதல் பதிலுரை தாக்கல் செய்வதற்கு காலவரையறைச் சட்டம் பொருந்தாது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும் இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்படுகிறதா? என்பது சட்டம் மற்றும் சங்கதி கலந்த எழுவினாவாகும். மேற்படி எதிர்வாதத்தை தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமையானது பிரதிவாதிகளான மனுதாரர்களையே சார்ந்தது என்பதால், மேற்படி எதிர்வாதத்தை முன்வைத்து பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்படும் கூடுதல் பதிலுரையை அனுமதிப்பதால் மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் தற்போது தான் வழக்கு விசாரணை துவங்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், பிரதிவாதிகள் தாக்கல் செய்யும் கூடுதல் பதிலுரைக்கு மறுப்புரை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்பதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி கூடுதல் பதிலுரையை அனுசரித்து இந்நீதிமன்றத்தால் ஏதேனும் கூடுதல் எழுவினா வனையப்பட்டால் கூட, இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்படுகிறதா? என்பதை நிரூபிக்க வேண்டிய முழு நிரூபணச் சுமையும் மனுதாரர்களுடையது என்பதால், மேற்படி கூடுதல் எழுவினா தொடர்பாக எவ்வித கூடுதல் சாட்சியங்களையும் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை கூட மனுதாரர்களுக்கு இல்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(vi) இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்களால் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள போது, இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்படுகிறது என கூறி, தாக்கல் செய்யப்படும் கூடுதல்

பதிலுரை இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதாலும், மேலும் மனுதாரர்கள் தங்கள் தரப்பு எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் மற்றொரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் தற்போது வழக்கு விசாரணை தொடங்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக 22.07.2024 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க.22.07.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.15 17:18:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.15 17:18:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.